# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
## Sessions Case No.5/2026

**Deposition of Witness for Prosecution PW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுடர்வளவன் | Father's Name | : | தெட்சிணாமூர்த்தி |
| Village | : | பழவனக்குடி | Taluk | : | கொரடாச்சேரி |
| Calling | : | | Age | : | 48 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 23rd day of February 2026.**

**(A1 & A2 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது பழவனக்குடியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். விடுதலை சிறுத்தை கட்சியில் முக்கிய பொறுப்பாளராக இருக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. எங்கள் கட்சியின் கொடிமரம் எப்படி சேதமடைந்தது என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படுவது நான் கொடுத்த புகார்தான். அந்த புகார் **அ.சா.ஆ.1**. போலீசார் விசாரிக்கவில்லை.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.23 15:13:22 +0530

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் பழவனக்குடியில் விடுதலை சிறுத்தை கட்சியில் முக்கிய பொறுப்பாளராக உள்ளேன் எனவும் 24.06.2017 ம் தேதி இரவு 10.00 மணிக்கு நான் பார்த்தபோது கொரடாச்சேரி பேரூராட்சியின் 12 வது வார்டிலும் பாலாக்குடி மெயின் ரோட்டிலும் உள்ள 2 கொடிமரங்களும் சேதப்படுத்தியிருந்தது எனவும் மேற்படி கொடி மரங்களை கார்த்திகேயன், காசி (எ) மனோபாலன் இருவரும் உடைத்து சேதப்படுத்தியதை சசிகுமார், பாலாஜி, பிரபு ஆகியோர் பார்த்துள்ளார்கள் எனவும் மேற்படி கொடிமரங்களின் சேத மதிப்பு ரூ.1,000/- இருக்கும் எனவும் இது சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் எனவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் தவறு. ஆஜர் எதிரிகள் எங்கள் கட்சியை சேர்ந்தவர்கள் என்பதாலும் எதிரிகள் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதாலும் நடந்த சம்பவத்தை மறைத்து எதிரிகளை காப்பாற்றுவதற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.23 15:13:27 +0530

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.23 15:13:32 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.5/2026**

**Deposition of Witness for Prosecution PW 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சசிகுமார் | Father's Name | : | மகாலிங்கம் |
| Village | : | மஞ்சகொல்லை | Taluk | : | கொரடாச்சேரி |
| Calling | : | | Age | : | 33 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 23rd day of February 2026.**

**(A1 & A2 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது மஞ்சகொல்லையில் வசித்து வருகிறேன். நான் கம்பி பிட்டர் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. 24.06.2017 ம் தேதி 2 கொடிமரங்கள் உடைந்திருந்தது என கேள்விபட்டேடன், யார் உடைத்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.23 15:13:38 +0530

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 24.06.2017 ம் தேதி அதிகாலை 3.30 மணியளவில் நானும் பிரபுவும் கொரடாச்கேரி ரயில்வே கேட் அருகே நடந்து வந்து கொண்டிருந்தபோது கொரடாச்சேரி பேரூராட்சியின் 12 வது வார்டிலும் பாலாக்குடி மெயின் ரோட்டிலும் உள்ள 2 கொடிமரங்களும் சேதப்படுத்தியிருந்தது எனவும் அப்போது கொரடாச்சேரி கார்த்திகேயனும் பழவனக்குடி காசி (எ) மனோபாலனும் விடுதலை சிறுத்தை கட்சி கொடிமரங்களை சேதப்படுத்தினார்கள் எனவும் நாங்கள் சத்தம் போட்டதும் ஓடிவிட்டார்கள் எனவும் சேத மதிப்பு ரூ.1,000/- இருக்கும் எனவும் இது சம்மந்தமாக சுடர்வளவன் புகார் கொடுத்தார் எனவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் தவறு. ஆஜர் எதிரிகள் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.23 15:13:44 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.